# NEP 2020ஐ தமிழ்நாடு நிராகரித்தல் என்பது வர்ணாசிரம மேலாதிக்கம் மற்றும் ஜாதிய படிநிலைக்கு எதிரான நிலைப்பாடு!

### I. DMK vs RSS

தமிழ்நாடு அரசு, மும்மொழி கொள்கையை மற்றும் தேசிய கல்விக் கொள்கை (NEP) 2020ஐ செயல்படுத்த மறுப்பது என்பது எந்தவொரு தேர்தல் இலாப உள்நோக்கத்துடனும் செய்யப்படும் முடிவல்ல. மேலும் கழக அரசின் சொந்த செல்வாக்கை காக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையும் அல்ல. மாறாக, இது ஒரு கருத்தியல் ஆழம் மிக்க அரசியல் நிலைப்பாடு. இந்த நிலைப்பாடு, சமூகத்தில் வர்ணாசிரம மேலாதிக்கத்தையும் ஜாதிய படிநிலையையும் நிலைநாட்ட முயலும் ராஷ்டிரிய சுயம்சேவக் சங்கத்தின் (RSS) சித்தாந்தத் திட்டத்திற்கு எதிரான உறுதியான நிலைப்பாடு.

NEP 2020ஐ வடிவமைத்த குழுவில் குறைந்தபட்சம் 15 பேர் RSS உறுப்பினர்கள் என்ற உண்மையை நாம் மிகவும் கவனமுடன் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இது RSS சித்தாந்தத்தை நாட்டில் நிலை நிறுத்த எடுக்கப்பட்ட திட்டமிட்ட நகர்வு. இந்திய மாணக்கர்கள் சாதி அடிப்படையிலான தொழில் அமைப்புக்குள் சிக்கி இருக்க வேண்டும் என்பதே RSSயின் பிரதான நோக்கம். அதாவது, சில சமூகக் குழுக்கள் (வர்ணாசிரம அடிப்படையில் உயர் ஜாதிகள்) மட்டுமே உயர்தர தொழில்களில் இடம் பெற வேண்டும். மற்றவர்கள் “கலாச்சார பாரம்பரியம்” என்ற பெயரில் கீழ்நிலை தொழில்களில் இடம் பெற வேண்டும் என்பதே NEP 2020யின் முக்கிய இலக்கு ஆகும்.

ஆனால் நமது திராவிடச் சித்தாந்தம் ஒவ்வொரு மாணாக்கருக்கும் அவர் அவர் விரும்பிய துறையில் ஜாதி மற்றும் மத வேறுபாடுகள் இன்றி உலகளாவிய அளவில் போட்டி போடும் திறன்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### II. வற்புறுத்தலாக நிதியை நிறுத்தி வைத்தல்

சமக்ரா சிக்ஷா திட்டத்தின் கீழ், ஒன்றிய அரசிடம் இருந்து தமிழ்நாட்டிற்கு வர வேண்டிய நிதியை நிறுத்தி வைத்து, தமிழக அரசை மிரட்டி, மும்மொழி கொள்கையையும், தேசிய கல்விக் கொள்கையையும் தமிழ்நாட்டில் திணிக்க மோடி அரசு முயற்சி செய்தது. இதுகுறித்த செய்தியை தி இந்து நாளிதழ் 2025 பிப்ரவரி 12 அன்று வெளியிட்டது. அதில், 2,400 கோடி ரூபாயை ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு வழங்க மாறுகிறது என குறிப்பிட்டது. இந்த நடவடிக்கை, தேசிய கல்விக் கொள்கை 2020ஐ மாநிலங்கள் கட்டாயமாக ஏற்கும் வகையில், ஒன்றிய அரசு நிதியை அழுத்தும் ஒரு ஆயுதமாக பயன்படுத்தும் முறையைத் தெளிவாக காட்டுகிறது. எவ்வாறாயினும், மாண்புமிகு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் எந்தவித மிரட்டலுக்கும் தலைவணங்க மறுத்தார். இதற்கான முக்கிய காரணம், கொள்கை மீதான கழக அரசின் உறுதியே ஆகும். தமிழ்நாட்டில் உள்ள 40 இலட்சத்திற்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்களின் நல்வாழ்வை பாதிக்க, ஒன்றிய அரசு எந்த எல்லைக்கும் செல்ல தயாராக இருக்கிறது என்பதையும் இது வெளிப்படையாகக் காட்டுகிறது.

### III. மும்மொழிக் கொள்கையின் முகமூடி

NEP 2020ல் கூறப்பட்டுள்ள மும்மொழிக் கொள்கை இந்தியை திணிக்கவில்லை என்று ஒன்றிய பாஜக அரசு கூறினாலும், அந்தக் கூற்று முற்றிலும் உண்மைக்கு புறம்பானது. உண்மையில், NEP 2020யின் தொடக்க வரைவு, இந்தி மொழியை கட்டாயமாக்க முயன்றது. இது “ஒரு தேசம், ஒரு மொழி” என்ற ஆர்எஸ்எஸ் பார்வையை நேரடியாக பிரதிபலித்தது, ஆனால், ‘இந்தி கட்டாயம்’ என்ற திட்டம் நாடு முழுவதும் கடுமையான எதிர்ப்பை சந்தித்ததும், அந்தக் குறிக்கோளை NEP 2020 கைவிட்டது. மேலும், NEP 2020 வெளிப்படையாக மொழியியல் பன்முகத்தன்மையை ஊக்குவிப்பதாகக் கூறினாலும், அதை ஆழமாக ஆராயும் போது சில முக்கியமான இரகசிய திட்டங்கள் நம் கவனத்திற்கு வருகின்றன. ஆங்கிலத்திற்கு எதிராக ஆர்எஸ்எஸ் தலைவர்கள் காட்டும் தீவிர எதிர்ப்பு, மற்றும் மும்மொழிக் கொள்கை பற்றிய விவாதங்களில் ஒன்றிய அரசு ஆங்கிலத்தைப் பற்றிய கருத்துக்கு காட்டும் மௌனம், ஒரு பெரிய சதியை வெளிக்காட்டுகிறது.

### IV. ஆங்கிலத்தை ஓரங்கட்டுதலும் இந்தி திணிப்பும்

ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பரிந்துரைத்த மும்மொழிக் கொள்கை — ‘மாணாக்கர்கள் தங்கள் தாய்மொழி, ஒரு வெளிநாட்டு மொழி மற்றும் இன்னொரு இந்திய மொழியைக் கற்க வேண்டும்’ எனக் கூறுவது தொடக்கநிலைப் பார்வையில் நடுநிலையானதாகத் தோன்றலாம். ஆனால், உண்மையில் இது இந்தி மொழியை இந்தி பேசாத மக்களிடம் மறைமுகமாக திணிக்கும் திட்டத்தைக் கொண்டது.

அதாவது, அரசுத் துறைகளில் ஆங்கிலத்தின் பயன்பாட்டை குறைந்து, இந்தி மொழியை அதிகளவில் பயன்படுத்தப்படுவது, இந்தி பேசாத மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் பெரும் தடையாகிறது. உள்துறை அமைச்சர் அமித் ஷா கூறியதுபோல், இன்று மத்திய அமைச்சரவையின் ஆவணங்களில் 70% இந்தியில் உள்ளன என்பது, இந்த மாற்றத்தின் கடுமையை நமக்கு வெளிப்படுத்துகிறது.

எடுத்துக்காட்டாக, ‘ஆங்கிலம் அடித்தள மக்களிடம் செல்லக் கூடாது’ என்ற நோக்கத்துடன் RSS முன்னெடுக்கும் செயல்பாடுகளைக் கவனத்தில் கொண்டு, NEP 2020ன் கீழ் ஒரு தமிழ்நாட்டு மாணவர் — தமிழ், ஆங்கிலம், தெலுங்கு ஆகிய மூன்று மொழிகளையும் கற்றுக்கொள்வதாக எடுத்துக்கொண்டால் — ஆரம்பக் கட்டத்தில் இது நடுநிலையானதாகத் தோன்றலாம். ஆனால், உயர்கல்வி மற்றும் தேசிய வேலைவாய்ப்புகளில் RSS முன்னெடுக்கும் செயல்பாடுகளால் ஆங்கிலத்தின் பங்கு குறைவதால், மாணக்கர்கள் இந்தி மொழியைக் கற்றுக்கொள்ளும் கட்டாயச் சூழலுக்கு தள்ளப்படுவார்கள். இது ஒரே நேரத்தில் ஆங்கிலத்தை ஒதுக்கி, மறைமுகமாக இந்தி ஆதிக்கத்தை நிறுவும் RSSயின் இரகசிய திட்டமாகும்.

### V. ஆங்கிலம் ஏன் முக்கியம்?

ஆங்கிலத்தைத் தொடர்ந்து ஓரங்கட்டும் ஒன்றிய அரசின் செயல், ஒரு சிறிய விஷயமல்ல. இது ஆர்எஸ்எஸ்/பாஜகவின் ஜாதி அடிப்படையிலான சமூக கட்டமைப்பை நிலைநிறுத்தும் திட்டத்தின் முக்கியமான ஒரு படியாகும். இந்த அணுகுமுறை, உயர் ஜாதியினராக இல்லாதவர்களுக்கு உலகளாவிய வாய்ப்புகளை குறைத்து, சாதி அடிப்படையிலான சமூக படிநிலைகளை மேலும் வலுப்படுத்தும் ஒரு முயற்சியாகும். பாஜக, மும்மொழிக் கொள்கையை பெரிதும் புகழ்ந்தாலும், ஆங்கிலத்தில் புலமை பெற்றவர்கள் இந்தியாவில் 10%க்கும் குறைவாகவே உள்ளனர். அதில் பெரும்பாலானோர் ஒப்பீட்டளவில் உயர் ஜாதிச் சமூக பின்னணியிலிருந்து வந்தவர்களாக இருக்கின்றனர். ஆனால், இந்தக் கடுமையான உண்மையை பாஜக ஒப்புக்கொள்வதில்லை. உலகளாவிய போட்டி, வேலைவாய்ப்பு மற்றும் சமூகபொருளாதார முன்னேற்றத்திற்கு ஆங்கிலம் ஒரு முக்கிய கருவியாக இருக்கிறது. ஆனால், இந்த முக்கியத்துவத்தை கொள்கை விவாதங்களில் திட்டமிட்டு பாஜக மறைக்கிறது. மும்மொழிக் கொள்கை உண்மையாகவே மூன்று மொழிகளையும் சமமாக ஆதரிப்பதாக இருந்திருக்க வேண்டிய போது, ‘மூன்றாவது இந்திய மொழி’ என்ற பகுதிக்கு மட்டும் ஒன்றிய பாஜக அரசு கவனம் செலுத்துவது, அவர்கள் எவ்வாறு தங்கள் உண்மை முகத்தை மறைக்க முயலுகிறார்கள் என்பதைக் காண்பிக்கிறது. அதாவது ஆங்கிலம் அடிதள மக்களுக்கு செல்ல கூடாது என அவர்கள் கூறுகிறார்கள். இந்த அணுகுமுறை, குறிப்பிட்ட சில உயர் ஜாதியைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் உலகளாவிய வாய்ப்புகளை வழங்கும் வகையில் அமைந்து, மற்ற அனைவரையும் குறைந்த வாய்ப்புகளுக்குள் கட்டுப்படுத்தும் செயல்முறையாகவே இருக்கிறது.

### VI. தமிழ்நாட்டின் இருமொழி கட்டமைப்பு: நிரூபிக்கப்பட்ட மாதிரி

1960களிலிருந்து, தமிழ் நாடு தனது இருமொழிக் கொள்கை — தமிழ் மற்றும் ஆங்கிலம் — வழியாக முன்னேறி வளர்ந்துள்ளது. இந்தக் கொள்கை, தமிழ்நாட்டை அமெரிக்கா, ஐரோப்பா போன்ற முன்னேறிய நாடுகளோடு மட்டுமல்ல, சீனா, தென் கொரியா, ஜப்பான் போன்ற வேகமாக வளர்ந்து வரும் நாடுகளோடும் உலகளாவிய திறனில் போட்டியிடச் செய்யும் நிலைக்கு தமிழ் நாட்டு மாணக்கர்களை தகுதிபடுத்தி உள்ளது.

1960களில், இந்தித் திணிப்புக்கு எதிராக அறிஞர் அண்ணா நடத்தி வந்த போராட்டத்தையும், அதைப் பின்தொடர்ந்து முத்தமிழ் அறிஞர் மு.கருணாநிதி அவர்கள் நடத்திய தொடர் சட்ட உரிமை போராட்டதையும் முன்னின்று தொடரும் விதமாக திராவிட சிந்தனையில் வளர்ந்த நமது முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு இன்றைய காலகட்டத்தில் ‘இரு மொழிக் கொள்கை’ வெறும் ஒரு மொழிக் கொள்கையாக மட்டும் தோன்றவில்லை. அது கலாச்சார ஆதிக்கத்துக்கு எதிராக எடுக்கப்பட்ட ஒரு சித்தாந்த கொள்கையாகவே பார்க்கிறார். மேலும் இன்று இப்போராட்டதை தமிழ் நாட்டின் உரிமை மற்றும் வளர்ச்சிக்கான போராட்டமாக நடத்திக் கொண்டு இருக்கிறார்.

### VII. NEP 2020 நாட்டின் வளர்ச்சிக்கு ஒரு பின்னடைவு

இதற்கிடையில், தேசிய கல்விக் கொள்கை 2020 (NEP 2020) முன்னெடுத்துள்ள விஸ்வகர்மா திட்டம், விளிம்புநிலை சமூகங்களைச் சேர்ந்த குழந்தைகளை சாதி சார்ந்த “பாரம்பரிய” தொழில்களுக்குள் கட்டுப்படுத்தும் ஆபத்தை ஏற்படுத்துகிறது. இதனால், அவர்களுக்கு பரந்த வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன. மேலும், ஆங்கிலப் புலமை இல்லாததாலும், இக்குழந்தைகள் தினந்தோறும் வளர்ந்து வரும் உலகமயமாக்கப்பட்ட மற்றும் புதுமை சார்ந்த வேலைச்சந்தைகளில் மற்றும் உயர் ஊதியமளிக்கும் வேலைவாய்ப்புகளில் இடம் பெற முடியாத நிலை உருவாகிறது. இதன் அடிப்படையில், கல்வியை இருமொழிக் கொள்கை மூலம் உயர்விற்கான வாயிலாக மாற்றிய தமிழ்நாட்டின் திராவிட அடிப்படையிலான வளர்ச்சி மாதிரிக்கு NEP 2020 ஒரு மிகப் பெரிய பின்னடைவை ஏற்படுத்த முயற்சிக்கிறது.



அமைச்சர்
அன்பில் மகேஸ் பொய்யாமொழி
பள்ளிக் கல்வித்துறை

### VIII. உள்ளடக்கிய வளர்ச்சிக்கான திராவிடக் கொள்கைகள்

NEP 2020ல் நெகிழ்வுத்தன்மை, தொழில் பயிற்சி மற்றும் உள்ளூர் மொழி வழிக் கல்வி ஆகியவை வாக்குறுதியாகக் கூறப்படுகின்றன. ஆனால், நடைமுறை நிலையில் அவை மிகுந்த கவலைகளை நமக்கு உருவாக்குகின்றன. ஒடுக்கப்பட்ட சமூகங்களில் இருந்து வரும் மாணவர்களை, “பாரம்பரிய தொழில்கள்” என்ற பெயரில் ஜாதி அடிப்படையிலான குறுகிய திறன்கள் சார்ந்த தொழில்களை நோக்கியே NEP 2020 தள்ளுகிறது. இதன் விளைவாக, ஏற்கனவே வறுமையில் போராடும் பின்தங்கிய சமூகங்களைச் சேர்ந்த பெற்றோர்கள், தங்களின் பிள்ளைகளை நீண்டகால கல்விக்குப் பதிலாக, குறுகிய காலம் மட்டுமே தேவைப்படும், குறைந்த ஊதியம் தரும் தொழில்களை நோக்கித் தள்ள நேரிடுகிறது. மேலும், குறுகிய கால கல்வியின் காரணமாக ஆங்கிலத்தில் புலமை பெற முடியாத ஒடுக்கப்பட்ட சமூகங்களில் இருந்து வரும் குழந்தைகள், அவர்களுடைய மூதாதையர்கள் போல் வறுமை சூழ்ந்த சமூகபொருளாதார நிலையில் சிக்கிவிடு கின்றனர். இன்றைய உலகமயமாக்கல் சூழ்நிலையில் ஆங்கில மொழியில் தொடர்பு கொள்ளும் திறன் இல்லாமையால் விளிம்புநிலை சமூகங்களின் மேல்நோக்கிய நகர்வு மிகப் பெரிய அளவில் தடுக்கப்படுகிறது. அது அறிவியல், புதுமை மற்றும் சர்வதேச வாய்ப்புகளுக்கான கதவுகளை அவர்களுக்கு மூடி விடுகிறது.

### IX. திராவிடக் கொள்கைகள்: உலகத் திறனை உருவாக்கும் பாதை

ஆனால், திராவிடக் கொள்கைகளில் வேரூன்றிய தமிழ்நாட்டின் செயல்பாடுகள் - இலவச காலை உணவு மற்றும் மதிய உணவு திட்டங்கள், 8ஆம் வகுப்பு வரை தேர்ச்சி கொள்கை, உயர்கல்விக்கான நிதி உதவித் தொகைகள், மேலும் ஆசிரியர்களும் மாணவர்களும் வெளிநாட்டு அனுபவம் பெற முன்னெடுக்கப்படும் திட்டங்கள் - உலகளாவிய போட்டித் திறனை நமது மாணவர்களிடம் ஏற்படுத்துகின்றன. குறிப்பாக நீண்ட கால கல்வியை நமது மாணவர்களிடம் உறுதி செய்கின்றன.

தமிழும் ஆங்கிலமும் இணைந்து நடைமுறையிலிருக்கும் இருமொழிக் கொள்கையின் மூலம், தமிழ் நாடு பல தலைமை நிர்வாக அதிகாரிகள், விஞ்ஞானிகள் மற்றும் புதுமைகளை உருவாக்குபர்களை உருவாக்கியுள்ளது. 2020ஆம் ஆண்டில், மாநிலத்தின் உயர் கல்விச் சேர்க்கை விகிதம் 50%ஐ நெருங்கியது. இது NEP 2020 இலக்கில் 2035க்குள் அடையத் திட்டமிட்ட அளவை, 2020ஆம் ஆண்டிலேயே நமது தமிழ்நாடு அடைந்துவிட்டது. இதன் பின்னணியில் ஒரு கேள்வி இங்கு எழுகிறது: வெற்றிகரமாக இயங்கி வரும் ஒரு கல்விக் கட்டமைப்பு, குறைவான வாய்ப்புகளை வழங்கும் NEP மாதிரிக்கு ஏன் அடிபணிய வேண்டும்?

NEP 2020 ஆரம்ப கல்வி தொட்டே தொழில் சார் கற்றலை வலியுறுத்துகிறது. ஆனால், தமிழ் நாடு மாற்றாக, கல்வியில் முதல் தலைமுறையாக உள்ளவர்களுக்கான இடைவெளியை குறைப்பதில் தான் தனது முக்கிய கவனத்தை செலுத்துகிறது. அது உயர் ஊதிய வேலைகள், அறிவியல் ஆராய்ச்சிகள், தொழில்முனைவோர் முயற்சிகள் ஆகியவற்றில் முன்னேறத் தேவையான கல்வி மற்றும் மொழி திறன்களை மாணவர்களுக்கு வழங்க ‘நான் முதல்வன் திட்டம்’ போன்ற பல முன்னெடுப்பு களை எடுக்கிறது.

### IX. மொழியியல் பன்முகத்தன்மையைப் பாதுகாத்தல்

“தமிழைப் பாதுகாக்கவும், பன்முகத்தன்மையை காக்கவும்; மொழி என்பது அடையாளம், திணிப்பு அல்ல,” என்ற நமது முதலமைச்சரின் அழைப்பு, இன்று தமிழ்நாடு எல்லை களைத் தாண்டி இந்தியா முழுவதும் பரவிக்கொண்டிருக்கிறது.

உதாரணமாக, 2011ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பில் 50க்கும் மேற்பட்ட மொழிகள் – போஜ்புரி, ராஜஸ்தானி, சத்தீஸ்கரி உள்ளிட்டவை – அதிகாரபூர்வமாக ‘இந்தி’யின் கீழ் இணைக்கப்பட்டன. இது மொழியியல் பன்முகத்தன்மையை அழித்து, ஒரே மாதிரியான கலாச்சார பேரினவாதத்தை வளர்க்கும் ஒரு பரந்த பயங்கரவாத போக்கை வெளிக்காட்டுகிறது. இவ் பயங்கரவாத போக்கை தனது ‘இரு மொழி கொள்கை’ மூலம் நமது முதலமைச்சர் இந்தியா முழுவதும் தடுத்துக் கொண்டு இருக்கிறார்.

பல இந்தி பேசாத மாநிலங்கள், ஆங்கிலத்தை ஒதுக்கி அதற்கு பதிலாக இந்தியை முன்னிறுத்தும் ஒன்றிய அரசின் கொள்கைகளால் திறன் வாய்ந்த மாணவர்களை உருவாக்கும் முயற்சியிலும் பின்னடைவைச் சந்தித்துக்கொண்டு இருக்கின்றன. இதன் காரணமாக இந்தியாவின் பன்முகத்தன்மையும் பாதிப்படைகிறது. மேலும் இது உலகளாவிய அறிவு மற்றும் திறன் வளர்ச்சியை நம் நாட்டிற்கு கொண்டு வருவதிலும் தடைகளை ஏற்படுத்துகிறது.

### X. இரு மொழிக் கொள்கை - பொறியியல் மற்றும் மருத்துவக் கல்வி

இந்தி பேசும் சில மாநிலங்களில், “பிராந்திய மொழிகளில்” பொறியியல் மற்றும் மருத்துவக் கல்வியை அறிமுகப்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்ட முயற்சி, மிகப் பெரிய தோல்வியை சந்தித்துக் கொண்டு இருக்கிறது. அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சில் (AICTE) தரவுகளின்படி, 2021-22 ஆம் ஆண்டில், இந்தத் திட்டத்தில் 19 கல்லூரிகளில் மொத்தம் 255 மாணவர்களே சேர்ந்து உள்ளனர்.

ஆராய்ச்சி ஒத்துழைப்பு, அறிவியல் வெளியீடுகள் மற்றும் உயர் தொழில்நுட்பத் துறைகள் பெருமளவில் ஆங்கிலத்தின் வாயிலாகவே இயங்கி கொண்டு இருக்கின்றன. மேலும் இத்துறைகளிடையே ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைந்த வளர்ச்சி ஆங்கில மொழியின் மூலமாகவே பெருமளவில் நடைபெறுகிறது. இதனால், பிராந்திய மொழியில் கல்வி பெறும் மாணவர்கள் தாங்களாகவே ஆங்கிலத்தில் தேர்ச்சி பெறவில்லை என்றால், தொழில்முறை முன்னேற்றத்தில் இடையூறு ஏற்படுகிறது.

இதற்கு மாறாக, தமிழ் நாட்டின் இருமொழிக் கொள்கை (தமிழும் ஆங்கிலமும்) இளைஞர்களை இந்தச் சிக்கல்களிலிருந்து காக்கிறது. இரு மொழிகளையும் சமநிலையில் (தமிழும் ஆங்கிலமும்) கற்றுக்கொள்வவர்கள், உலகளாவிய வாய்ப்புகளையும் சமூகபொருளாதார முன்னேற்றத்தையும் எளிதாக அடையக்கூடியதோடு, தங்களது மொழி மற்றும் கலாச்சார வேர்களையும் உறுதியாகப் பேண முடிகிறது. எனவே இரு மொழிகளிலும் ( தமிழ், ஆங்கிலம் ) பொறியியல் மற்றும் மருத்துவக் கல்வியை அறிமுகப்படுத்த நமது அரசு முன்னெடுப்புகளை எடுத்து வருகிறது.

### XI. பன்முகத்தன்மையை பாதுகாத்தல் மற்றும் வளர்ச்சி

மேலே கூறியவை அனைத்தும் ஒரே ஒரு முக்கியமான உண்மையை வெளிக்கொண்டு வருகின்றன: தமிழ்நாடு NEP 2020ஐ ஏற்க மறுக்கும் முடிவின் மையத்தில், மொழிக்குரிய சண்டை இல்லை; இது ஒரு சமூக இயக்கத்தையும் பன்முகத்தன்மையையும் காக்கும் போராட்டம்.

இதன் பின்னணியில், ஒரே ஒரு கேள்வி எழுகிறது:

NEP 2020 மூலம் உண்மையில் யாருக்குப் பயன்?

நமது பெற்றோர்கள், தங்களது குழந்தைகளின் கனவுகளை நிறைவேற்ற பரந்த அளவிலான ஆங்கில மொழிப் பயன்பாட்டு திறனை அவர்களுக்கு வழங்க ஆசைப்படுகின்றனர். இதை உணர்ந்த கழக அரசு, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் தமிழ் மற்றும் ஆங்கிலம் என இரு மொழிகளிலும் புலமையை உறுதி செய்ய வேலை செய்கிறது.

கழக அரசு “எல்லோருக்கும் எல்லாம்” என்ற கோட்பாட்டின் அடிப்படையில், அனைவரும் உலகத்துடன் போட்டியிடும் திறனை பெற வேண்டும் என விரும்புகிறது.

கழக அரசின் கோட்பாட்டின்படி, தாய்மொழியான தமிழ் சுய சிந்தனையை வளர்க்கும் மொழி; ஆங்கிலம், அந்த சுய சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு பொருளாதார முன்னேற்றத்தை நோக்கி செல்ல உதவும் கருவி.

### XII. கூட்டாட்சியை உறுதி செய்யும் தமிழ்நாடு

“மொழி அரசியலில்” ஒரு குழப்பத்தை உருவாக்கும் மாநிலமாக பாஜக நம் தமிழ் நாட்டை சித்தரிக்க முயன்றாலும், உண்மையில் நம் தமிழ்நாடு கூட்டாட்சி கொள்கைகளையும் கல்வியில் உள்ளடங்கிய வளர்ச்சி வாய்ப்புகளையும் பாதுகாக்கும் ஒரு முக்கிய மாநிலமாகவும், பிற மாநிலங்களுக்கு முன்னோடியாகவும் திகழ்கிறது. மொழியின் பயன்பாட்டை ஒரே மாதிரியில் ஒட்டுமொத்தமாக்கும் முயற்சியும், ஒரு மாநிலம் தன் குழந்தைகளுக்கு என்ன வகையான கல்வியை வழங்க வேண்டும் என்பதை ஒன்றிய அரசு நிர்ணயிக்க விரைவதும், இந்திய அரசியலமைப்பின் அடிப்படை கொள்கைகளுக்கு முரணானதாகும்.

பெற்றோர்கள் NEP 2020 வழங்கும் தாக்கங்களை உணர்ந்து சிந்திக்கும்போது, தமிழ்நாட்டின் நிலைப்பாடு ஒரு முக்கிய உண்மையை நமக்கு நினைவூட்டுகிறது. எல்லா கல்விச் சீர்திருத்தங்களும் நன்மைக்குரியவையாக இருப்பது அவசியமல்ல. சில நேரங்களில், அவை பழைய சமூகப் படிநிலைகள் மற்றும் ஒடுக்குமுறைகளை மீண்டும் நிலைநிறுத்தும் சாதனங்களாக இருக்கக்கூடும். இதன் அடிப்படையில், தமிழ்நாட்டின் உறுதியான எதிர்ப்பு ஒரு ஆழமான கேள்வியை இங்கு எழுப்புகிறது. “கல்வி என்பது சமூகத்தின் எல்லா மக்களையும் மேம்படுத்தும் கருவியாக இருக்க வேண்டுமா? அல்லது ஒரு ஒற்றை சிந்தனையின் விரிவாக்கமாகவே அது செயல்பட வேண்டுமா?” ஒன்றிய அரசின் ஆணைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக, தமிழ் நாடு தான் கடுமையாகப் போராடி பெற்ற கல்வி வாய்ப்புகள், மொழியியல் அடையாளம் மற்றும் சமூக இலட்சியங்களை விட்டுக் கொடுக்க என்றும் தயாரில்லை.

மேலும் NEP 2020ல் மறைவாக உள்ள திட்டங்களையும் நடைமுறைகளையும் வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதன் மூலம், தமிழ் நாடு, நாட்டின் பிற மாநிலங்களையும் சிந்திக்க அழைக்கிறது.



திருச்செந்தூர் வட்டம் ஆழ்வை கிழக்கு ஒன்றியம் வரண்டியேல் ஊராட்சி மன்ற அலுவலகம் கட்டிடத்தினை மீன்வளம் மீனவர் நலன் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ஆர். ராதா கிருஷ்ணன் திறந்து வைத்து நலத்திட்ட உதவிகள் வழங்கினார் உடன் மாநில மீனவர் அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், ஆத்தூர் ஒன்றிய செயலாளர் ஏ.பி.சதீஷ்குமார், ஆழ்வை சேர்மன் ஜனகர் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



வேலூர் மாநகரம் தொரப்பாடியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ.12.67லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய நியாயவிலைக் கடையை மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. திறந்து வைத்து பொதுமக்களுக்கு ரேசன் பொருட்களை வழங்கினார். இதில் தொரப்பாடி 49 வது வட்ட கழக செயலாளர் அப்பு என்ற தனசேகர் மற்றும் நகர கழக நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள் உடன் கலந்து கொண்டனர்.